ॐ

# कैवल्योपनिषद्
# கைவல்யோபநிஷத்$_3$

## சாரம்

கைவல்யோபநிஷத் அதர்வண வேதத்தில் அமைந்துள்ளது. கைவல்யம் என்றால் ஒன்று மட்டும் இருத்தல் என்று பொருள் படுகிறது. அந்த ஒன்றைப் பற்றிய அறிவு இங்கு புகட்டப் படுவதனால் கைவல்யோபநிஷத் என்று பெயர் பெறுகிறது.

ஆச்வலாயனர் என்பவர் ப்ரஹ்மதேவரை முறைப்படி அணுகி, அனைத்து பாவங்களையும் நீக்கும், மேலான, சாதுக்களால் நாடப்படுகின்ற, ப்ரஹ்மத்தை அடைய வைக்கின்ற ப்ரஹ்ம ஞானத்தைக் கொடுங்கள் என்று வினவுகிறார் (1). குருவானவர் முத ல் ப்ரஹ்ம ஞானத்துக்கான மூன்று உபாயங்களைக் கூறுகின்றார். அவை 1. ச்ரத்தா 2. பக்தி 3. த்யானம். இங்கு ச்ரத்தா என்ற சொல் ல் குருவிடம் முழு நம்பிக்கையுடன் வேதாந்த ச்ரவணம் செய்தல் என்ற சாதனையையும் பக்தி என்ற சொல் ல் ஸந்தேஹங்களை நீக்க மேற்கொள்ளப்படுகின்ற மனனம் அதாவது சிந்தித்தல் என்ற சாதனையையும் த்யானம் என்ற சொல் ல் பெற்ற அறிவை நிலைப்படுத்துவதற்காக மேற்கொள் கின்ற நிதித்யாஸனம் என்ற சாதனையையும் குறிப்பிடுகிறார் (2). ப்ரஹ்மனை அடைய எவை உபாயங்களல்ல என்பதைக் குறிப்பிடுகிறார். பொருள்கள், சந்ததி, வைதீககர்மங்கள் போன்றவை நேரடியாக ஞானத்துக்குத் துணை புரியாது. இவற்றை எல்லாம் தர்மப்படி கையாண்டு, பிறகு இவற்றைத் துறந்து, வைராக்யம் போன்ற தகுதிகளைப் பெற்று விசாரத்தினால்தான் ப்ரஹ்மத்தை அறியமுடியும் (3). ஆகவே மோக்ஷத்தை அடைய சாதனைகள் படிப்படியாக அமைந்திருப்பதைக் குறிப்பிடுகிறார். மனத் தூய்மையை அடைந்து, முமுக்ஷுத்வம் போன்ற தகுதிகளை

வளர்த்துக்கொண்டு, வேதாந்தத்தில் பொருளாக இருக்கின்ற ப்ரஹ்மத்தைப் பற்றிய உறுதியான ஞானத்தை அடைந்தவர்கள் மோக்ஷத்தை அடைகிறார்கள் (4). அடுத்து, ஞானத்திற்குப் பின் மேற்கொள்ளப்படும் நிதித்யாஸனம் என்று அழைக்கப்படுகின்ற த்யானமும் மோக்ஷபலனும் விளக்கப்படுகின்றன. த்யானத்துக்கு உதவுகின்ற தனிமையான சூழ்நிலை, தூய்மையான இடம், இருக்கை, அமர்கின்ற முறை இவையெல்லாம் கூறப்படுகின்றன (5). த்யானத்தில் ப்ரஹ்மனை எத்தகைய தன்மை உடையதாக சிந்திக்கவேண்டும் என்று அந்த ப்ரஹ்மனின் தன்மை இங்கு கூறப்படுகிறது. இங்கு குறிப்பிடப்படுகின்ற தன்மைகள் அனைத்தும் ப்ரஹ்மனின் நிர்குண ஸ்வரூபம் (6). குணங்கள் அற்ற ப்ரஹ்மனை த்யானிக்க இயலாத சமயத்தில் சகுண ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும் (7, 8). சகுணப்ரஹ்மனை த்யானித்து பக்குவம் அடைந்த பின் நிர்குணப்ரஹ்ம த்யானத் துக்குச் செல்லலாம். மோக்ஷம் என்ற பலனை அடைவதற்கு தேச-காலத்தைக் கடந்து நிற்கின்ற, அனைத்து ஜீவர்களுக் குள்ளும் ஸாக்ஷியாக இருக்கின்ற ப்ரஹ்மனைப் பற்றிய ஞானத்தைத்தவிர வேறு மார்கம் இல்லை (9, 10).

அடுத்து ச்ரவணம் என்ற சாதனை பேசப்படுகிறது. ச்ரவணம் என்பது குருவிடம் வேதாந்த சாஸ்த்ரத்தைக் கேட்டல். இந்த சாதனையை விளக்க உவமை ஒன்று இங்கு கையாளப்படுகின்றது. அசையாத ஒரு கட்டையைக் கீழே வைத்து அதன் மேல் வேறொரு கட்டையை வைத்துக் கடையும் பொழுது அக்னி தோன்றுகிறது. இவ்விதமாக எடுக்கப்படும் அக்னியே ஹோம குண்டத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது. இங்கு, அசையாத கீழ்க்கட்டை உறுதியான மனதுக்கும், மேல்கட்டை ஓங்கார தத்துவத்துக்கும், கடைதல் என்ற செயல் விசாரத்துக்கும், கடைவதால் கிடைக்கும் நெருப்பு ஞானத்துக்கும், நெருப்பால் எரிக்கப்படும் பொருள் துயரத்துக்கும் ஒப்பிடப்படுகின்றன (11). ஒரு ஜீவன், விழிப்பு-கனவு-உறக்கம் என்ற மூன்று அவஸ்தைகளை அனுபவிக்கிறான். இந்த அவஸ்தைகளின் துணைகொண்டு

விசாரத்தை மேற்கொள்ளும்போது, இந்த மூன்று அவஸ்தைகளிலும் மாறாது இருக்கின்ற ஒரே அறிவு ஸ்வரூபமாக விளங்கி வரும் தத்துவமே ஆத்மா அல்லது ப்ரஹ்மன் என்று அழைக்கப் படுகிறது. அனுபவிக்கப்படும் பொருள்கள் மாறுபடுகின்றன. நிலையற்றவையாக இருக்கின்றன. ஆத்மாவாகிய நான், இந்த அவஸ்தைகளுக்கும் அனைத்து உலகத்துக்கும் ஆதாரமாக இருக்கின்றேன் (12 - 14). இந்த அனைத்துலகமும் எவரிடமிருந்து தோன்றியதோ, அவரே ஈச்வரன் என்று ஈச்வரதத்துவம் அறிமுகப் படுத்தப்படுகிறது (15).

ஈச்வரனுடைய உண்மையான ஸ்வரூபமும் ஜீவனுடைய உண்மையான ஸ்வரூபமும் வேறுபடுவதில்லை என்ற ஜீவ-ஈச்வர ஐக்கியம் பேசப்பட்டு அதன் பலனும் கூறப்படுகின்றது (16, 17).

இவ்விதம் குருவினுடைய உபதேசத்தைக் கேட்ட சிஷ்யன், இப்பொழுது நான் என்னை எப்படி உணர்ந்துள்ளேன் என்று தன்னுடைய அறிவை வெளிப்படுத்துகிறான். நானே அனைத் துக்கும் ஸாக்ஷியாக இருக்கின்றேன். எல்லாம் என்னிடத்தில் தோன்றி, என்னையே சார்ந்து இருந்து, என்னிடத்திலேயே லயமடைகிறது. நான் சிறியதைக் காட்டிலும் சிறியதாகவும் பெரியதைக் காட்டிலும் பெரியதாகவும் அனைத்துமாகவும் இருக்கின்றேன். நான் அனைத்தையும் அறிகின்றேன். என்னை யாரும் அறியார். பஞ்ச பூதங்கள், புண்ய பாவங்கள் இவை எல்லாம் என்னிடத்தில் இல்லை (18 - 22). சிஷ்யன் அடைந்த ஞானத்தின் பலன் பேசப்படுகிறது (23).

இவ்விதமான ஞானத்தை அடைய மனத்தூய்மை அவசியமாகிறது. அந்த மனத்தூய்மைக்கு சாதனை கூறப்படுகிறது (24). இவ்விதமான ஞானத்தை அடைவதன் மூலம் உறுதியாக ஒருவன் மோக்ஷத்தை அடைகின்றான். இங்கு உபநிஷத், மோக்ஷத்தை கைவல்யம் என்றே அழைக்கிறது (25).

## शान्तिपाठः
சா1ந்திபாட2:

**भद्रं कर्णेभिः श्रृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्ताक्ष्यों अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु। ओं शान्तिः शान्तिः शान्तिः ।।**

ப4த்3ரம் கர்ணேபி4: ச்1ருணுயாம தே3வா:। ப4த்3ரம் பச்1யேமாக்ஷபி4ர்யஜத்ரா:। ஸ்தி2ரைரங்கை3ஸ்துஷ்டு வாம்ஸஸ்தனூபி4:। வ்யசே1ம தே3வஹிதம் யதா3யு:। ஸ்வஸ்தி ந இந்த்3ரோ வ்ருத்3த4ச்1ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விச்1வவேதா3:। ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி:। ஸ்வஸ்தி நோ ப்3ருஹஸ்பதிர்த3தா4து। ஓம் சா1ந்தி: சா1ந்தி: சா1ந்தி: ।।

**देवाः** தே3வா: தேவர்களே **कर्णेभिः** கர்ணேபி4: செவிகளால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **श्रृणुयाम** ச்1ருணுயாம கேட்போமாக. **यजत्राः** யஜத்ரா: வணக்கத்திற்குரிய தேவர்களே **अक्षभिः** அக்ஷபி4: கண்களால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **पश्येम** பச்1யேம பார்ப்போமாக. **स्थिरैः अङ्गैः** ஸ்தி2ரை: அங்கை3: உறுதியான உறுப்புக்களுடன் **तनूभिः** தனூபி4: வேதங்களால் (உங்களை நாங்கள்) **तुष्टुवांसः** துஷ்டுவாம்ஸ: புகழ்ந்துகொண்டு **यद् आयुः** யத்3 ஆயு: எவ்வளவு ஆயுள் **देवहितं** தே3வஹிதம் இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை) **व्यशेम** வ்யசே1ம அனுபவிப்போமாக. **वृद्धश्रवाः** வ்ருத்3த4ச்1ரவா: ஓங்கிய புகழையடைந்த **इन्द्रः** இந்த்3ர: இந்த்ரன் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **विश्ववेदाः** விச்1வவேதா3: அனைத்தையும் அறிகின்ற **पूषा** பூஷா ஸூர்யதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்).

**अरिष्टनेमिः** அரிஷ்டனேமி: தடையின்றிச் செல்லும் **तार्क्ष्यः** தார்க்ஷ்ய: கருடதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **बृहस्पतिः** ப்$_3$ருஹஸ்பதி: (பேரறிவுடைய) ப்ருஹஸ்பதி **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை **दधातु** த$_3$தா$_4$து அருளட்டும். **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்து கொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

**अथाश्वलायनो भगवन्तं परमेष्ठिनमुपसमेत्योवाच -**

அதா$_2$ ச்$_1$வலாயனோ ப$_4$க$_3$வந்தம்
பரமேஷ்டி$_2$னமுபஸமேத்யோவாச –

**अथ** அத$_2$ (தன்னைத் தகுதிப்படுத்திக்கொண்ட) பிறகு **आश्वलायनः** ஆச்$_1$வலாயன: ஆச்வலாயனர் (என்ற முனிவர்) **भगवन्तं** ப$_4$க$_3$வந்தம் பகவான் **परमेष्ठिनं** பரமேஷ்டி$_2$னம் ப்ரஹ்மாவை **उपसमेत्य** உபஸமேத்ய முறைப்படி அணுகி **उवाच** உவாச (கீழ்க்கண்ட கேள்வியை) கேட்டார்.

தன்னைத் தகுதிப்படுத்திக்கொண்ட பிறகு ஆச்வலாயனர் என்ற முனிவர், பகவான் ப்ரஹ்மாவை முறைப்படி அணுகி கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டார்.

**१. अधीहि भगवो ब्रह्मविद्यां वरिष्ठां**
**सदा सद्भिः सेव्यमानां निगूढाम् ।**
**ययाचिरात् सर्वपापं व्यपोह्य**
**परात्परं पुरुषं याति विद्वान् ।।**

1. அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் வரிஷ்டா$_2$ம்
ஸதா$_3$ ஸத்$_3$பி$_4$: ஸேவ்யமானாம் நிகூ$_3$டா$_4$ம் ।
யயாசிராத் ஸர்வபாபம் வ்யபோஹ்ய
பராத்பரம் புருஷம் யாதி வித்$_3$வான் ।।

**भगवः** ப$_4$க$_3$வ: இறைவா **वरिष्ठां** வரிஷ்டா$_2$ம் மிகவும் மேலானதும் **सद्भिः** ஸத்$_3$பி$_4$: பெரியோர்களால் **सदा** ஸதா$_3$ எப்பொழுதும் **सेव्यमानां** ஸேவ்யமானாம் நாடப்படுவதும் **निगूढां** நிகூ$_3$டா$_4$ம் மறைபொருளாக உள்ளதுமான **ब्रह्मविद्यां** ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ப்ரஹ்மவித்யாவை **अधीहि** அதீ$_4$ஹி (எனக்கு) உபதேசியுங்கள். **विद्वान्** வித்$_3$வான் விவேகியானவன் **यया** யயா எதனால் (எந்த அறிவினால்) **सर्वपापं** ஸர்வபாபம் எல்லாப் பாபத்தையும் **अचिरात्** அசிராத் உடனே **व्यपोह्य** வ்யபோஹ்ய நீக்கி **परात्** பராத் மாயைக்கும் **परं** பரம் மேலான **पुरुषं** புருஷம் பரம்பொருளை **याति** யாதி அடைகிறானோ (அப்படிப்பட்ட அறிவை உபதேசியுங்கள்).

இறைவா, மிகவும் மேலானதும் பெரியோர்களால் எப்பொழுதும் நாடப்படுவதும் மறைபொருளாக உள்ளதுமான ப்ரஹ்மவித்யாவை எனக்கு உபதேசியுங்கள். விவேகியானவன், எந்த அறிவினால் எல்லாப் பாபத்தையும் உடனே நீக்கி, மாயைக்கும் மேலான பரம்பொருளை அடைகிறானோ, அப்படிப்பட்ட அறிவை உபதேசியுங்கள்.

**२. तस्मै स होवाच पितामहश्च श्रद्धाभक्तिध्यानयोगादवेहि ।।**

2. தஸ்மை ஸ ஹோவாச பிதாமஹச்$_1$ச
ச்$_1$ரத்$_3$தா$_4$ப$_4$க்தித்$_4$யானயோகா$_3$த$_3$வேஹி ।।

**सः पितामहः च** ஸ: பிதாமஹ: ச அந்த ப்ரஹ்மதேவரும் **श्रद्धा-भक्ति-ध्यान-योगात्** ச்1ரத்3தா4-ப4க்தி-த்4யான-யோகா3த் ச்ரத்தா பக்தி த்யானம் இவற்றின் துணைகொண்டு **अवेहि** அவேஹி (அந்தப் பரம்பொருளை) அறிந்து கொள் (என்று) **तस्मै** தஸ்மை அவருக்கு **ह उवाच** ஹ உவாச பதிலளித்தார்.

அந்த ப்ரஹ்மதேவரும் ச்ரத்தா, பக்தி, த்யானம் இவற்றின் துணைகொண்டு அந்தப் பரம்பொருளை அறிந்து கொள் என்று அவருக்கு பதிலளித்தார்.

**३. न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः ।**
**परेण नाकं निहितं गुहायां विभ्राजते यद् यतयो विशन्ति ॥**

3. ந கர்மணா ந ப்ரஜயா த4னேன
த்யாகே3னைகே அம்ருதத்வமானசு1: ।
பரேண நாகம் நிஹிதம் கு3ஹாயாம்
விப்4ராஜதே யத்3 யதயோ விச1ந்தி ॥

**त्यागेन** த்யாகே3ன த்யாகத்தினால் **एके** ஏகே ஒரு சிலர் **अमृतत्वं** அம்ருதத்வம் மரணமற்ற நிலையை **आनशुः** ஆனசு1: அடைந்தார்கள். **कर्मणा** கர்மணா கர்மத்தினால் **न** ந (மரணமற்ற நிலையை) அடையவில்லை. **प्रजया** ப்ரஜயா ஸந்ததியினாலும் **धनेन** த4னேன பொருளினாலும் **न** ந (மரணமற்ற நிலையை) அடையவில்லை. **यत्** யத் எது **नाकं** நாகம் ஸ்வர்கத்தைக்காட்டிலும் **परेण** பரேண மேலானதோ **गुहायां** கு3ஹாயாம் மனதில் **निहितं** நிஹிதம் வெளிப்படுகிறதோ **विभ्राजते** விப்4ராஜதே தானாக ப்ரகாசிக்கிறதோ (அதை) **यतयः** யதய: ஸாதகர்கள் **विशन्ति** விச1ந்தி அடைகிறார்கள்.

த்யாகத்தினால் ஒரு சிலர் மரணமற்ற நிலையை அடைந்தார்கள். கர்மத்தினால் மரணமற்ற நிலையை அடையவில்லை. ஸந்ததியினாலும் பொருளினாலும் மரணமற்ற நிலையை அடையவில்லை. எது ஸ்வர்கத்தைக் காட்டிலும்

மேலானதோ, மனதில் வெளிப்படுகிறதோ, தானாக ப்ரகாசிக் கிறதோ, அதை ஸாதகர்கள் அடைகிறார்கள்.

**४. वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः सन्न्यासयोगाद् यतयः शुद्धसत्त्वाः ।**
**ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥**

4. வேதா$_3$ந்தவிஞ்ஞானஸுநிச்$_1$சிதார்தா$_2$:
ஸந்ந்யாஸயோகா$_3$த்$_3$ யதய:ஶு$_1$த்$_3$த$_4$ஸத்த்வா: ।
தே ப்$_3$ரஹ்மலோகேஷு பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥

**शुद्धसत्त्वाः** ஶு$_1$த்$_3$த$_4$ஸத்த்வா: தூய்மையான மனதையுடைய **यतयः** யதய: ஸாதகர்கள் **सन्न्यासयोगात्** ஸந்ந்யாஸயோகா$_3$த் ஸந்யாஸம் என்ற ஸாதனையினால் **वेदान्त-विज्ञान-सुनिश्चित-अर्थाः** வேதா$_3$ந்த-விஞ்ஞான-ஸுநிச்$_1$சித-அர்தா$_2$: வேதாந்தத்தி ருந்து தோன்றிய ஞானத்திற்குப் பொருளான (ப்ரஹ்மனில்) உறுதியை அடைகிறார்கள். **ते सर्वे** தே ஸர்வே அவர்கள் அனைவரும் **परामृताः** பராம்ருதா: (வாழும் பொழுதே) ப்ரஹ்மனுடன் ஒன்றானவர்களாக இருந்து கொண்டு **परान्तकाले** பராந்தகாலே முடிவான மரண காலத்தில் **ब्रह्मलोकेषु** ப்$_3$ரஹ்மலோகேஷு ப்ரஹ்மனிடத்தில் **परिमुच्यन्ति** பரிமுச்யந்தி முழுமையாகக் கலந்து விடுகிறார்கள்.

தூய்மையான மனதையுடைய ஸாதகர்கள் ஸந்யாஸம் என்ற ஸாதனையினால் வேதாந்தத்தி ருந்து தோன்றிய ஞானத்திற்குப் பொருளான ப்ரஹ்மனில் உறுதியை அடைகி றார்கள். அவர்கள் அனைவரும் வாழும்பொழுதே ப்ரஹ்மனுடன் ஒன்றானவர்களாக இருந்துகொண்டு, முடிவான மரண காலத்தில் ப்ரஹ்மனிடத்தில் முழுமையாகக் கலந்து விடுகிறார்கள்.

**५. विविक्तदेशे च सुखासनस्थः शुचिः समग्रीवशिरश्शरीरः ।**
**अत्याश्रमस्थः सकलेन्द्रियाणि निरुध्य भक्त्या स्वगुरुं प्रणम्य ॥**

5. விவிக்ததே$_3$சே$_1$ ச ஸுகா$_2$ஸனஸ்த$_2$:
 சு$_1$சி: ஸமக்$_3$ரீவசி$_1$ரச்$_1$ச$_1$ரீர: ।
அத்யாச்$_1$ரமஸ்த$_2$: ஸகலேந்த்$_3$ரியாணி
 நிருத்$_4$ய ப$_4$க்த்யா ஸ்வகு$_3$ரும் ப்ரணம்ய ।।

**विविक्तदेशे** விவிக்ததே$_3$சே$_1$ தனிமையான இடத்தில் **शुचिः** சு$_1$சி: தூய்மையானவனாக **सुख-आसनस्थः** ஸுக$_2$-ஆஸனஸ்த$_2$: (தனக்கு) உகந்த விதத்தில் ஆஸனத்தில் அமர்ந்தவன் **सम-ग्रीव-शिरः-शरीरः** ஸம-க்$_3$ரீவ-சி$_1$ர:-ச$_1$ரீர: கழுத்து தலை உடல் இவற்றை ஸமமாக வைத்தவன் **अत्याश्रमस्थः** அத்யாச்$_1$ரமஸ்த$_2$: மேலான (ஸந்யாஸ) ஆச்ரமத்தில் இருந்தவனாக **सकल-इन्द्रियाणि** ஸகல-இந்த்$_3$ரியாணி எல்லா இந்த்ரியங்களையும் **निरुध्य** நிருத்$_4$ய அமைதிப்படுத்தி **भक्त्या** ப$_4$க்த்யா பக்தியுடன் **स्व-गुरुं** ஸ்வ-கு$_3$ரும் தன் குருவை **प्रणम्य च** ப்ரணம்ய ச வணங்கி (ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்).

தனிமையான இடத்தில், தூய்மையானவனாக, தனக்கு உகந்த விதத்தில் ஆஸனத்தில் அமர்ந்தவன், கழுத்து, தலை, உடல் இவற்றை ஸமமாக வைத்தவன், மேலான ஸந்யாஸ ஆச்ரமத்தில் இருந்தவனாக, எல்லா இந்த்ரியங்களையும் அமைதிப்படுத்தி, பக்தியுடன் தன் குருவை வணங்கி ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்.

**६. हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्य मध्ये विशदं विशोकम्।**
**अचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम्।**
**तथादिमध्यान्तविहीनमेकं विभुं चिदानन्दमरूपमद्भुतम्।।**

6. ஹ்ருத்புண்ட$_3$ரீகம் விரஜம் விசு$_1$த்$_3$த$_4$ம்
 விசிந்த்ய மத்$_4$யே விச$_1$த$_3$ம் விசோ$_1$கம் ।
அசிந்த்யமவ்யக்தமனந்தரூபம்
 சி$_1$வம் ப்ரசா$_1$ந்தமம்ருதம் ப்$_3$ரஹ்மயோனிம் ।
ததா$_2$தி$_3$மத்$_4$யாந்தவிஹீனமேகம்
 விபு$_4$ம் சிதா$_3$னந்த$_3$மரூபமத்$_3$பு$_4$தம் ।।

**विरजं** விரஜம் உறுதியுடனும் **विशुद्धं** விசு$_1$த்$_3$த$_4$ம் தூய்மையுடனும் கூடிய **हृत्-पुण्डरीकं** ஹ்ருத்-புண்ட$_3$ரீகம் தாமரை போன்ற இதயத்தை நோக்கி **विचिन्त्य** விசிந்த்ய முழுகவனத்தையும் செலுத்தியவனாக (ஒருவன்) **मध्ये** மத்$_4$யே அங்கு **विशदं** விச$_1$த$_3$ம் பரிசுத்தமான **विशोकं** விசோ$_1$கம் துயரங்களற்ற **अचिन्त्यं** அசிந்த்யம் சிந்தனைக்கு எட்டாத **अव्यक्तं** அவ்யக்தம் வெளித்தோற்றத்திற்கு வராத **अनन्तरूपं** அனந்த ரூபம் (எண்ணங்களுடன் இணைத்துப் பார்த்தால்) விதவிதமான ரூபங்களை அடைந்த **शिवं** சி$_1$வம் மங்களமான **प्रशान्तं** ப்ரசா$_1$ந்தம் அமைதியான **अमृतं** அம்ருதம் அழியாத **ब्रह्मयोनिं** ப்$_3$ரஹ்மயோனிம் அனைத்துக்கும் காரணமான **तथा आदि-मध्य-अन्त-विहीनं** ததா$_2$ ஆதி$_3$-மத்$_4$ய-அந்த-விஹீனம் ஆதி-நடு-அந்தம் அற்ற **एकं** ஏகம் ஒன்றான **विभुं** விபு$_4$ம் எங்கும் நிறைந்த **चिदानन्दं** சிதா$_3$னந்த$_3$ம் அறிவு ஸ்வரூபமான ஆனந்த ஸ்வரூபமான **अरूपं** அரூபம் உருவமற்ற **अद्भुतं** அத்$_3$பு$_4$தம் உன்னதமான (ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்).

உறுதியுடனும் தூய்மையுடனும் கூடிய தாமரை போன்ற இதயத்தை நோக்கி, முழுகவனத்தையும் செலுத்தியவனாக ஒருவன், அங்கு பரிசுத்தமான, துயரங்களற்ற, சிந்தனைக்கு எட்டாத, வெளித்தோற்றத்திற்கு வராத, எண்ணங்களுடன் இணைத்துப் பார்த்தால் விதவிதமான ரூபங்களை அடைந்த, மங்களமான, அமைதியான, அழியாத, அனைத்துக்கும் காரணமான, ஆதி-நடு-அந்தம் அற்ற, ஒன்றான, எங்கும் நிறைந்த, அறிவு ஸ்வரூபமான, ஆனந்த ஸ்வரூபமான, உருவமற்ற, உன்னதமான ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்.

**७. उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम्।**
**ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात्।।**

7. உமாஸஹாயம் பரமேச்$_1$வரம் ப்ரபு$_4$ம்
த்ரிலோசனம் நீலகண்ட$_2$ம் ப்ரசா$_1$ந்தம் ।
த்$_4$யாத்வா முனிர்க$_3$ச்ச$_2$தி பூ$_4$தயோனிம்
ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ।।

**उमासहायं** உமாஸஹாயம் உமையுடன் கூடிய **प्रभुं** ப்ரபு₄ம் (உலகிற்கு) ப்ரபுவான **त्रिलोचनं** த்ரிலோசனம் மூன்று கண்களையுடைய **नीलकण्ठं** நீலகண்ட₂ம் நீலவண்ணக்கழுத்தையுடைய **प्रशान्तं** ப்ரசா₁ந்தம் அமைதி ஸ்வரூபமான **परमेश्वरं** பரமேச்₁வரம் பரமேச்வரரை **मुनिः** முனி: முனிவர் **ध्यात्वा** த்₄யாத்வா த்யானித்து **भूतयोनिं** பூ₄தயோனிம் உலகத்திற்கு உபாதான காரணமான **समस्त-साक्षिं** ஸமஸ்த-ஸாக்ஷிம் எல்லாவற்றுக்கும் ஸாக்ஷியான **तमसः** தமஸ: மாயைக்கும் **परस्तात्** பரஸ்தாத் மேலான (ப்ரஹ்மனை) **गच्छति** க₃ச்ச₂தி அடைகிறார்.

உமையுடன் கூடிய, உலகிற்கு ப்ரபுவான, மூன்று கண் களையுடைய, நீலவண்ணக் கழுத்தையுடைய, அமைதி ஸ்வரூப மான பரமேச்வரரை முனிவர் த்யானித்து உலகத்திற்கு உபாதான காரணமான, எல்லாவற்றுக்கும் ஸாக்ஷியான, மாயைக்கும் மேலான ப்ரஹ்மனை அடைகிறார்.

८. स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट्।
स एव विष्णुः स प्राणः स कालोऽग्निः स चन्द्रमाः ।।

8. ஸ ப்₃ரஹ்மா ஸ சி₁வ: ஸேந்த்₃ர: ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட் ।
ஸ ஏவ விஷ்ணு: ஸ ப்ராண: ஸ காலோऽக்₃னி: ஸ சந்த்₃ரமா: ।।

**सः ब्रह्मा** ஸ: ப்₃ரஹ்மா அவரே ப்ரஹ்மதேவர். **सः शिवः** ஸ: சி₁வ: அவரே சிவன். **सेन्द्रः** ஸேந்த்₃ர: அவரே இந்த்ரன். **सः** ஸ: அவரே **परमः** பரம: மேலான **स्वराट्** ஸ்வராட் தானாக ப்ரகாசிக்கின்ற **अक्षरः** அக்ஷர: அழியாத பொருள். **सः एव विष्णुः** ஸ: ஏவ விஷ்ணு: அவரே விஷ்ணு. **सः प्राणः** ஸ: ப்ராண: அவரே ப்ராணன். **सः कालः** ஸ: கால: அவரே காலதத்துவம். **अग्निः** அக்₃னி: (அவரே) நெருப்பு. **सः चन्द्रमाः** ஸ: சந்த்₃ரமா: அவரே சந்த்ரன்.

அவரே ப்ரஹ்மதேவர். அவரே சிவன். அவரே இந்த்ரன். அவரே மேலான, தானாக ப்ரகாசிக்கின்ற அழியாத பொருள். அவரே விஷ்ணு. அவரே ப்ராணன். அவரே காலதத்துவம். அவரே நெருப்பு. அவரே சந்த்ரன்.

९. स एव सर्वं यद् भूतं यच्च भव्यं सनातनम्।
ज्ञात्वा तं मृत्युमत्येति नान्यः पन्था विमुक्तये।।

9. ஸ ஏவ ஸர்வம் யத்$_3$ பூ$_4$தம் யச்ச ப$_4$வ்யம் ஸனாதனம் ।
ஞாத்வா தம் ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தா$_2$ விமுக்தயே ।।

**यत्** யத் எது **भूतं** பூ$_4$தம் இறந்த காலத்தில் இருந்ததோ **यत् च भव्यं** யத் ச ப$_4$வ்யம் எது (நிகழ்காலத்தில் இருக்கிறதோ) எதிர்காலத்திலும் இருக்கப்போகிறதோ **सः एव** ஸ: ஏவ அதுவே **सर्वं** ஸர்வம் அனைத்துமாகவும் **सनातनं** ஸனாதனம் நிலையானதாகவும் உள்ளது. **तं** தம் அதை **ज्ञात्वा** ஞாத்வா அறிந்து **मृत्युं** ம்ருத்யும் (ஒருவன்) மரணத்தை **अत्येति** அத்யேதி கடக்கிறான். **विमुक्तये** விமுக்தயே மோக்ஷத்திற்கு **अन्यः** அந்ய: வேறு **पन्थाः** பந்தா$_2$: பாதை **न** ந இல்லை.

எது இறந்த காலத்தில் இருந்ததோ, எது நிகழ்காலத்தில் இருக்கிறதோ, எதிர்காலத்திலும் இருக்கப்போகிறதோ, அதுவே அனைத்துமாகவும் நிலையானதாகவும் உள்ளது. அதை அறிந்து ஒருவன் மரணத்தைக் கடக்கிறான். மோக்ஷத்திற்கு வேறு பாதை இல்லை.

१०. सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि।
सम्पश्यन् ब्रह्म परमं याति नान्येन हेतुना।।

10. ஸர்வபூ$_4$தஸ்த$_2$மாத்மானம் ஸர்வபூ$_4$தானி சாத்மனி ।
ஸம்பச்$_1$யன் ப்$_3$ரஹ்ம பரமம் யாதி நாந்யேன ஹேதுனா ।।

**आत्मानं** ஆத்மானம் தன்னை **सर्वभूतस्थं** ஸர்வபூ$_4$தஸ்த$_2$ம் எல்லா உயிரினங்களிலும் **आत्मनि** ஆத்மனி தன்னில் **सर्वभूतानि च** ஸர்வபூ$_4$தானி ச எல்லா உயிரினங்களையும் **सम्पश्यन्** ஸம்பச்$_1$யன் தெளிவாக அறிபவன் **परमं** பரமம் மேலான **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **याति** யாதி அடைகிறான். **अन्येन** அந்யேன (இவ்விதமான அறிவைத்

தவிர) வேறு **हेतुना** ஹேதுனா உபாயத்தினால் **न** ந (ஒருவன் ப்ரஹ்மனை) அடையமுடியாது.

தன்னை எல்லா உயிரினங்களிலும், தன்னில் எல்லா உயிரினங்களையும் தெளிவாக அறிபவன் மேலான ப்ரஹ்மனை அடைகிறான். இவ்விதமான அறிவைத்தவிர வேறு உபாயத்தினால் ஒருவன் ப்ரஹ்மனை அடைய முடியாது.

**११. आत्मानमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम्।**
**ज्ञाननिर्मथनाभ्यासात् पाशं दहति पण्डितः॥**

11. ஆத்மானமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் ।
ஞானநிர்மத₂னாப்₄யாஸாத் பாச₁ம் த₃ஹதி பண்டி₃த: ॥

**आत्मानं** ஆத்மானம் மனதை **अरणिं** அரணிம் (கீழ்) கட்டையாகவும் **प्रणवं च** ப்ரணவம் ச ஓங்காரத்தை **उत्तर-अरणिं** உத்தர-அரணிம் மேல் கட்டையாகவும் **कृत्वा** க்ருத்வா கொண்டு **ज्ञान-निर्मथन-अभ्यासात्** ஞான-நிர்மத₂ன-அப்₄யாஸாத் விசாரம் என்ற பயிற்சியால் கடைந்து **पण्डितः** பண்டி₃த: பண்டிதன் **पाशं** பாச₁ம் பந்தத்தை **दहति** த₃ஹதி எரிக்கிறான்.

மனதை கீழ்க்கட்டையாகவும் ஓங்காரத்தை மேல் கட்டையாகவும் கொண்டு, விசாரம் என்ற பயிற்சியால் கடைந்து, பண்டிதன் பந்தத்தை எரிக்கிறான்.

ஞானநிர்மதன அப்யாஸம் - என்ற இடத்தில் ஞானம்-விசாரம், நிர்மதனம்-கடைதல், அப்யாஸம்-பயிற்சி.

**१२. स एव मायापरिमोहितात्मा शरीरमास्थाय करोति सर्वम्।**
**स्त्रियन्नपानादिविचित्रभोगैः स एव जाग्रत्परितृप्तिमेति॥**

12. ஸ ஏவ மாயாபரிமோஹிதாத்மா
ச₁ரீரமாஸ்தா₂ய கரோதி ஸர்வம் ।
ஸ்த்ரியன்னபானாதி₃விசித்ரபோ₄கை₃:
ஸ ஏவ ஜாக்₃ரத்பரித்ருப்திமேதி ॥

**सः एव** ஸ: ஏவ அதுவே (அந்த ப்ரஹ்மனே) **माया-परिमोहित-आत्मा** மாயா-பரிமோஹித-ஆத்மா மாயையால் மோஹத்தை அடைந்த மனதுடன் **शरीरं** ச$_1$ரீரம் சரீரத்தில் **आस्थाय** ஆஸ்தா$_2$ய அபிமானம் வைத்து **सर्वं** ஸர்வம் அனைத்தையும் **करोति** கரோதி செய்கிறது. **सः एव** ஸ: ஏவ அதுவே (அந்த ப்ரஹ்மனே) **जाग्रत्** ஜாக்$_3$ரத் விழிப்பு நிலையில் **स्त्री-अन्न-पान-आदि-विचित्र-भोगैः** ஸ்த்ரீ-அன்ன-பான-ஆதி$_3$-விசித்ர-போ$_4$கை$_3$: ஸ்த்ரீ அன்னம் பானம் முத ய விதவித மான போக்ய வஸ்துக்களினால் **परितृप्तिं** பரித்ருப்திம் இன்பத்தை **एति** ஏதி அடைகிறது.

அந்த ப்ரஹ்மனே, மாயையால் மோஹத்தை அடைந்த மனதுடன், சரீரத்தில் அபிமானம் வைத்து அனைத்தையும் செய்கிறது. அந்த ப்ரஹ்மனே விழிப்புநிலையில் ஸ்த்ரீ, அன்னம், பானம் முத ய விதவிதமான போக்யவஸ்துக்களினால் இன்பத்தை அடைகிறது.

**१३. स्वप्ने स जीवः सुखदुःखभोक्ता स्वमायया कल्पितजीवलोके ।**
**सुषुप्तिकाले सकले विलीने तमोऽभिभूतः सुखरूपमेति ।।**

13. ஸ்வப்னே ஸ ஜீவ: ஸுக$_2$து$_3$:க$_2$போ$_4$க்தா
ஸ்வமாயயா கல்பிதஜீவலோகே ।
ஸுஷுப்திகாலே ஸகலே விலீனே
தமோऽபி$_4$பூ$_4$த: ஸுக$_2$ரூபமேதி ।।

**जीवः** ஜீவ: ஜீவனாக விளங்கி வருகின்ற **सः** ஸ: அவன் (அந்த ப்ரஹ்மன்) **स्व-मायया** ஸ்வ-மாயயா தன்னுடைய மாயையால் **कल्पितजीवलोके स्वप्ने** கல்பிதஜீவலோகே ஸ்வப்னே தோற்றுவிக்கப் பட்ட கனவுலகில் **सुखदुःखभोक्ता** ஸுக$_2$து$_3$:க$_2$போ$_4$க்தா ஸுக துக்கத்தை அனுபவிக்கிறான். **सकले विलीने** ஸகலே விலீனே எல்லாம் ஒடுங்கிய **सुषुप्ति-काले** ஸுஷுப்தி-காலே உறக்கநிலையில் **तमोऽभिभूतः**

தமோऽபி$_4$பூ$_4$த: அறியாமையால் மூடப்பட்டவனாக **सुख-रूपं** ஸுக$_2$-ரூபம் ஸுகத்தை **एति** ஏதி அடைகிறான்.

ஜீவனாக விளங்கி வருகின்ற அந்த ப்ரஹ்மன் தன்னுடைய மாயையால் தோற்றுவிக்கப்பட்ட கனவுலகில் ஸுக துக்கத்தை அனுபவிக்கிறான். எல்லாம் ஒடுங்கிய உறக்கநிலையில் அறியாமையால் மூடப்பட்டவனாக ஸுகத்தை அடைகிறான்.

**१४. पुनश्च जन्मान्तरकर्मयोगात् स एव जीवः स्वपिति प्रबुद्धः ।**
**पुरत्रये क्रीडति यश्च जीवः ततस्तु जातं सकलं विचित्रम् ।**
**आधारमानन्दमखण्डबोधं यस्मिँल्लयं याति पुरत्रयं च ॥**

14. புனச்$_1$ச ஜன்மாந்தரகர்மயோகா$_3$த்
ஸ ஏவ ஜீவ: ஸ்வபிதி ப்ரபு$_3$த்$_3$த$_4$: ।
புரத்ரயே க்ரீட$_3$தி யச்$_1$ச ஜீவ:
ததஸ்து ஜாதம் ஸகலம் விசித்ரம் ।
ஆதா$_4$ரமானந்த$_3$மக$_2$ண்ட$_3$போ$_3$த$_4$ம்
யஸ்மிம்ல்லயம் யாதி புரத்ரயம் ச ॥

**जन्मान्तर-कर्म-योगात्** ஜன்மாந்தர-கர்ம-யோகா$_3$த் முற்பிறவியில் செய்த கர்மபலனின் காரணமாக **सः एव** ஸ: ஏவ அதே **जीवः** ஜீவ: ஜீவன் **पुनः च** புன: ச மீண்டும் **स्वपिति** ஸ்வபிதி கனவு காண்கிறான். **प्रबुद्धः** ப்ரபு$_3$த்$_3$த$_4$: (பிறகு) விழித்துக்கொள்கிறான். **यः च जीवः** ய: ச ஜீவ: எந்த ஜீவன் **पुरत्रये** புரத்ரயே (இந்த) மூன்று அவஸ்தைகளை **क्रीडति** க்ரீட$_3$தி அனுபவிக்கிறானோ **ततः तु** தத: து அவனிடமிருந்தே **सकलं** ஸகலம் எல்லா **विचित्रं** விசித்ரம் வேற்றுமைகளும் **जातं** ஜாதம் தோன்றின. **यस्मिन्** யஸ்மின் எவனிடத்தில் (எந்த ஜீவனிடத்தில்) **पुरत्रयं च** புரத்ரயம் ச (இந்த) மூன்று நிலைகளும் **लयं याति** லயம் யாதி ஒடுங்குகின்றனவோ (அந்த ஜீவன்) **अखण्ड-बोधं** அக$_2$ண்ட$_3$-போ$_3$த$_4$ம் பிளவுபடாத ஞான ஸ்வரூபமாகவும் **आनन्दं** ஆனந்த$_3$ம் ஆனந்த ஸ்வரூபமாகவும் **आधारं** ஆதா$_4$ரம் (அனைத்திற்கும்) ஆதாரமாகவும் (உள்ளான்).

முற்பிறவியில் செய்த கர்மபலனின் காரணமாக அதே ஜீவன் மீண்டும் கனவு காண்கிறான். பிறகு விழித்துக் கொள்கிறான். எந்த ஜீவன் இந்த மூன்று அவஸ்தைகளை அனுபவிக்கிறானோ, அவனிடமிருந்தே எல்லா வேற்றுமைகளும் தோன்றின. எந்த ஜீவனிடத்தில் இந்த மூன்று நிலைகளும் ஒடுங்குகின்றனவோ, அந்த ஜீவன் பிளவுபடாத ஞான ஸ்வரூபமாகவும் ஆனந்தஸ்வரூபமாகவும் அனைத்திற்கும் ஆதாரமாகவும் உள்ளான்.

**१५. एतस्माज्जायते प्राणः मनः सर्वेन्द्रियाणि च।**
**खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी॥**

15. ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண: மன: ஸர்வேந்த்3ரியாணி ச ।
க2ம் வாயுர்ஜ்யோதிராப: ப்ரிதி2வீ விச்1வஸ்ய தா4ரிணீ ॥

**एतस्मात्** ஏதஸ்மாத் இதனிடமிருந்து (இந்த ப்ரஹ்மனிடமிருந்து) **प्राणः** ப்ராண: ப்ராணன் **मनः** மன: மனம் **सर्वेन्द्रियाणि च** ஸர்வேந்த்3ரியாணி ச அனைத்து இந்த்ரியங்கள் **खं** க2ம் ஆகாசம் **वायुः** வாயு: காற்று **ज्योतिः** ஜ்யோதி: நெருப்பு **आपः** ஆப: நீர் **विश्वस्य** விச்1வஸ்ய அனைத்திற்கும் **धारिणी** தா4ரிணீ ஆதாரமாக இருக்கும் **पृथिवी** ப்ருதி2வீ பூமி (ஆகியவை) **जायते** ஜாயதே தோன்றுகின்றன.

இந்த ப்ரஹ்மனிடமிருந்து ப்ராணன், மனம், அனைத்து இந்த்ரியங்கள், ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் பூமி ஆகியவை தோன்றுகின்றன.

**१६. यत्परं ब्रह्म सर्वात्मा विश्वस्यायतनं महत्।**
**सूक्ष्मात्सूक्ष्मतरं नित्यं तत्त्वमेव त्वमेव तत्॥**

16. யத்பரம் ப்3ரஹ்ம ஸர்வாத்மா விச்1வஸ்யாயதனம் மஹத் ।
ஸூக்ஷ்மாத்ஸூக்ஷ்மதரம் நித்யம் தத்த்வமேவ த்வமேவ தத் ॥

**यत्** யத் எந்த **महत्** மஹத் மேலான **परं ब्रह्म** பரம் ப்3ரஹ்ம பரப்ரஹ்மன் **नित्यं** நித்யம் என்றுமுள்ளதோ **सर्वात्मा** ஸர்வாத்மா எல்லோருடைய ஆத்மாவாகவும் உள்ளதோ **विश्वस्य** விச்1வஸ்ய உலகத்திற்கு **आयतनं** ஆயதனம் ஆதாரமானதோ **सूक्ष्मात्** ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மத்தைக் காட்டிலும் **सूक्ष्मतरं** ஸூக்ஷ்மதரம் ஸூக்ஷ்மமாக உள்ளதோ **तत् एव** தத் ஏவ அதுவே **त्वं** த்வம் நீ **त्वं एव** த்வம் ஏவ நீயே **तत्** தத் அது.

எந்த மேலான பரப்ரஹ்மன் என்றுமுள்ளதோ, எல்லோருடைய ஆத்மாவாகவும் உள்ளதோ, உலகத்திற்கு ஆதாரமானதோ, ஸூக்ஷ்மத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாக உள்ளதோ அதுவே நீ. நீயே அது.

**१७. जाग्रत्स्वप्नसुषुप्त्यादि प्रपञ्चं यत्प्रकाशते ।**
**तद् ब्रह्माहमिति ज्ञात्वा सर्वबन्धैः प्रमुच्यते ।।**

17. ஜாக்3ரத்ஸ்வப்னஸுஷுப்த்யாதி3 ப்ரபஞ்சம் யத்ப்ரகாச1தே ।
தத்3 ப்3ரஹ்மாஹமிதி ஞாத்வா ஸர்வப3ந்தை4: ப்ரமுச்யதே ।।

**जाग्रत्-स्वप्न-सुषुप्ति-आदि-प्रपञ्चं** ஜாக்3ரத்-ஸ்வப்ன-ஸுஷுப்தி-ஆதி3-ப்ரபஞ்சம் விழிப்பு-கனவு-உறக்கம் முத ய உலகத்தை **यत् प्रकाशते** யத் ப்ரகாச1தே விளக்குவது எதுவோ **तत् ब्रह्म** தத் ப்3ரஹ்ம அந்த ப்ரஹ்மன் **अहं इति** அஹம் இதி நான் என்று **ज्ञात्वा** ஞாத்வா அறிந்து **सर्वबन्धैः** ஸர்வப3ந்தை4: (ஒருவன்) எல்லா பந்தங்களி ருந்தும் **प्रमुच्यते** ப்ரமுச்யதே விடுவிக்கப்படுகிறான்.

விழிப்பு-கனவு-உறக்கம் முத ய உலகத்தை விளக்குவது எதுவோ, அந்த ப்ரஹ்மன் நான் என்று அறிந்து, ஒருவன் எல்லா பந்தங்களி ருந்தும் விடுவிக்கப்படுகிறான்.

**१८. त्रिषु धामसु यद्भोग्यं भोक्ता भोगश्च यद्भवेत् ।**
**तेभ्यो विलक्षणः साक्षी चिन्मात्रोऽहं सदाशिवः ।।**

18. த்ரிஷு தா₄மஸு யத்₃போ₄க்₃யம் போ₄க்தா போ₄க₃ச்₁ச யத்₃ப₄வேத் ।
தேப்₄யோ விலக்ஷண: ஸாக்ஷீ சின்மாத்ரோऽஹம் ஸதா₃ சி₁வ: ।।

**त्रिषु धामसु** த்ரிஷு தா₄மஸு மூன்று அவஸ்தைகளில் **यत् भोग्यं** யத் போ₄க்₃யம் அனுபவிக்கப்படுவதாகவும் **भोक्ता** போ₄க்தா அனுபவிப் பவனாகவும் **भोग: च** போ₄க₃: ச அனுபவிப்பதற்கு கருவியாகவும் **यत्** யத் எது **भवेत्** ப₄வேத் உள்ளதோ **तेभ्य:** தேப்₄ய: அவற்றி ருந்து **विलक्षण:** விலக்ஷண: வேறுபட்ட **अहं** அஹம் நான் **साक्षी** ஸாக்ஷீ ஸாக்ஷியாகவும் **चिन्मात्र:** சின்மாத்ர: தூய்மையான அறிவு ஸ்வரூப மாகவும் **सदाशिव:** ஸதா₃சி₁வ: எப்பொழுதும் மங்கள ஸ்வரூப மாகவும் (இருக்கிறேன்).

மூன்று அவஸ்தைகளில், அனுபவிக்கப்படுவதாகவும் அனுபவிப்பவனாகவும் அனுபவிப்பதற்குக் கருவியாகவும் எது உள்ளதோ, அவற்றி ருந்து வேறுபட்ட நான், ஸாக்ஷியாகவும் தூய்மையான அறிவு ஸ்வரூபமாகவும் எப்பொழுதும் மங்கள ஸ்வரூபமாகவும் இருக்கிறேன்.

१९. मय्येव सकलं जातं मयि सर्वं प्रतिष्ठितम्।
मयि सर्वं लयं याति तद् ब्रह्माद्वयमस्म्यहम्।।

19. மய்யேவ ஸகலம் ஜாதம் மயி ஸர்வம் ப்ரதிஷ்டி₂தம் ।
மயி ஸர்வம் லயம் யாதி தத்₃ ப்₃ரஹ்மாத்₃வயமஸ்ம்யஹம் ।।

**मयि एव** மயி ஏவ என்னிடத்தி ருந்தே **सकलं** ஸகலம் அனைத்தும் **जातं** ஜாதம் தோன்றின. **मयि** மயி என்னிடத்தில் (என்னையே) **सर्वं** ஸர்வம் அனைத்தும் **प्रतिष्ठितं** ப்ரதிஷ்டி₂தம் சார்ந்துள்ளன. **मयि** மயி என்னிடத்தில் **सर्वं** ஸர்வம் அனைத்தும் **लयं याति** லயம் யாதி ஒடுங்கு கின்றன. **अहं** அஹம் நான் **तत्** தத் அந்த **अद्वयं** அத்₃வயம் இரண்டற்ற **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக **अस्मि** அஸ்மி இருக்கிறேன்.

என்னிடத்தி ருந்தே அனைத்தும் தோன்றின. என்னையே அனைத்தும் சார்ந்துள்ளன. என்னிடத்தில் அனைத்தும் ஒடுங்குகின்றன. நான் அந்த இரண்டற்ற ப்ரஹ்மனாக இருக்கிறேன்.

२०. अणोरणीयानहमेव तद्वद् महानहं विश्वमहं विचित्रम्।
पुरातनोऽहं पुरुषोऽहमीशः हिरण्मयोऽहं शिवरूपमस्मि॥

20. அணோரணீயானஹமேவ தத்$_3$வத்$_3$
மஹானஹம் விச்$_1$வமஹம் விசித்ரம் ।
புராதனோऽஹம் புருஷோऽஹமீச$_1$:
ஹிரண்மயோऽஹம் சி$_1$வரூபமஸ்மி ॥

**अणोः** அணோ: சிறியதைக்காட்டிலும் **अणीयान्** அணீயான் சிறியவன் **अहं एव** அஹம் ஏவ நானே. **तद्वत्** தத்$_3$வத் அதுபோல் **महान्** மஹான் (பெரியதைக் காட்டிலும்) பெரியவன் **अहं** அஹம் நான். **विचित्रं** விசித்ரம் விதவிதமான **विश्वं** விச்$_1$வம் உலகம் **अहं** அஹம் நான். **अहं** அஹம் நான் **पुरातनः** புராதன: என்றும் உள்ளவன். **अहं** அஹம் நான் **पुरुषः** புருஷ: (அனைத்தையும்) வ்யாபித்துள்ளவன். **ईशः** ஈச$_1$: (நான்) ஆள்பவன். **अहं** அஹம் நான் **हिरण्मयः** ஹிரண்மய: ஒளிர்கின்ற ரூபமானவன். **शिवरूपं** சி$_1$வரூபம் மங்கள ஸ்வரூபமாக **अस्मि** அஸ்மி இருக்கிறேன்.

சிறியதைக் காட்டிலும் சிறியவன் நானே. அதுபோல் பெரியதைக் காட்டிலும் பெரியவன் நான். விதவிதமான உலகம் நான். நான் என்றும் உள்ளவன். நான் அனைத்தையும் வ்யாபித்துள்ளவன். நான் ஆள்பவன். நான் ஒளிர்கின்ற ரூபமானவன். மங்கள ஸ்வரூபமாக இருக்கிறேன்.

२१. अपाणिपादोऽहमचिन्त्यशक्तिः पश्याम्यचक्षुः स शृणोम्यकर्णः।
अहं विजानामि विविक्तरूपः न चास्ति वेत्ता मम चित्सदाहम्॥

21. அபாணிபாதோ₃ऽஹமசிந்த்ய ச₁க்தி:
பச்₁யாம்யசக்ஷு: ஸ ச்₁ருணோம்யகர்ண: ।
அஹம் விஜானாமி விவிக்தரூப:
ந சாஸ்தி வேத்தா மம சித்ஸதா₃ஹம் ।।

**अहं** அஹம் நான் **अपाणि-पादः** அபாணி-பாத₃: கை-கால்கள் அற்றவன். **अचिन्त्यशक्तिः** அசிந்த்யச₁க்தி: (இருப்பினும்) எல்லையற்ற சக்தியை உடையவன். **अचक्षुः** அசக்ஷு: கண் இல்லாத (நான்) **पश्यामि** பச்₁யாமி பார்க்கிறேன். **अकर्णः** அகர்ண: செவி இல்லாத (நான்) **शृणोमि** ச்₁ருணோமி கேட்கிறேன். **सः अहं** ஸ: அஹம் இப்படிப்பட்ட நான் **विविक्तरूपः** விவிக்தரூப: விதவிதமான வடிவத்தை அடைந்தவனாக **विजानामि** விஜானாமி (அனைத்தையும்) அறிகிறேன். **मम** மம (ஆனால்) என்னை **वेत्ता** வேத்தா அறிபவன் (ஒருவனும்) **न च अस्ति** ந ச அஸ்தி இல்லை. **अहं** அஹம் நான் **सदा** ஸதா₃ என்றும் **चित्** சித் தூய்மையான அறிவு ஸ்வரூபம்.

நான் கை-கால்கள் அற்றவன். இருப்பினும் எல்லையற்ற சக்தியை உடையவன். கண் இல்லாத நான் பார்க்கிறேன். செவி இல்லாத நான் கேட்கிறேன். இப்படிப்பட்ட நான் விதவிதமான வடிவத்தை அடைந்தவனாக அனைத்தையும் அறிகிறேன். ஆனால் என்னை அறிபவன் ஒருவனும் இல்லை. நான் என்றும் தூய்மையான அறிவு ஸ்வரூபம்.

**२२. वेदैरनेकैरहमेव वेद्यः वेदान्तकृद्वेदविदेव चाहम् ।**
**न पुण्यपापे मम नास्ति नाशः न जन्मदेहेन्द्रियबुद्धिरस्ति ।**
**न भूमिरापो न च वह्निरस्ति न चानिलो मेऽस्ति न चाम्बरं च ।।**

22. வேதை₃ரனேகைரஹமேவ வேத்₃ய:
வேதா₃ந்தக்ருத்₃வேத₃விதே₃வ சாஹம் ।
ந புண்யபாபே மம நாஸ்தி நாச₁:
ந ஜன்மதே₃ஹேந்த்₃ரியபு₃த்₃தி₄ரஸ்தி ।

ந பூ4மிராபோ ந ச வஹ்நிரஸ்தி
ந சானிலோ மேऽஸ்தி ந சாம்ப3ரம் ச ।।

**अनेकैः वेदैः** அனேகை: வேதை3: அனைத்து வேதங்களாலும் **वेद्यः** வேத்3ய: அறியப்படவேண்டியவன் **अहं एव** அஹம் ஏவ நானே. **वेदान्तकृत्** வேதா3ந்தக்ருத் வேதாந்தத்தைத் தோற்றுவித்தவனும் **वेदवित् च** வேத3வித் ச வேதத்தை அறிபவனும் **अहं एव** அஹம் ஏவ நானே. **मम** மம எனக்கு **पुण्यपापे** புண்யபாபே புண்யபாபங்கள் **न** ந கிடையாது. **नाशः** நாச1: (எனக்கு) அழிவு **न अस्ति** ந அஸ்தி கிடையாது. **जन्म-देह-इन्द्रिय-बुद्धिः** ஜன்ம-தே3ஹ-இந்த்3ரிய-பு3த்3தி4: பிறப்பு உடல் இந்த்ரியங்கள் புத்தி **न अस्ति** ந அஸ்தி (ஆகியவை எனக்கு) கிடையாது. **भूमिः** பூ4மி: பூமி **आपः** ஆப: நீர் **न** ந (எனக்கு) கிடையாது. **वह्निः च** வஹ்னி: ச நெருப்பும் **न अस्ति** ந அஸ்தி (எனக்கு) கிடையாது. **मे** மே எனக்கு **अनिलः च** அனில: ச காற்றும் **न अस्ति** ந அஸ்தி கிடையாது. **अम्बरं च** அம்ப3ரம் ச (எனக்கு) ஆகாசமும் **न च** ந ச கிடையாது.

அனைத்து வேதங்களாலும் அறியப்பட வேண்டியவன் நானே. வேதாந்தத்தைத் தோற்றுவித்தவனும் வேதத்தை அறிபவனும் நானே. எனக்கு புண்யபாபங்கள் கிடையாது. எனக்கு அழிவு கிடையாது. பிறப்பு, உடல், இந்த்ரியங்கள், புத்தி ஆகியவை எனக்குக் கிடையாது. பூமி, நீர் எனக்குக் கிடையாது. நெருப்பும் எனக்குக் கிடையாது. எனக்குக் காற்றும் கிடையாது. எனக்கு ஆகாசமும் கிடையாது.

**२३. एवं विदित्वा परमात्मरूपं गुहाशयं निष्कलमद्वितीयम् ।**
**समस्तसाक्षिं सदसद्विहीनं प्रयाति शुद्धं परमात्मरूपम् ।।**

23. ஏவம் விதி3த்வா பரமாத்மரூபம்
கு3ஹாச1யம் நிஷ்கலமத்3விதீயம் ।
ஸமஸ்தஸாக்ஷிம் ஸத3ஸத்3விஹீனம்
ப்ரயாதி சு1த்3த4ம் பரமாத்மரூபம் ।।

**एवं** ஏவம் இங்கு விளக்கியபடி **गुहाशयं** கு3ஹாச1யம் மனதில் வெளிப்படுகின்ற **निष्कलं** நிஷ்கலம் பிளவுபடாத **अद्वितीयं** அத்3விதீயம் இரண்டற்ற **समस्त-साक्षिं** ஸமஸ்த-ஸாக்ஷிம் அனைத் திற்கும் ஸாக்ஷியான **सत्-असत्-विहीनं** ஸத்-அஸத்-விஹீனம் கார்ய-காரணமற்ற **शुद्धं** சு1த்3த4ம் தூய்மையான **परमात्मरूपं** பரமாத்மரூபம் மேலான ஆத்ம ஸ்வரூபத்தை **विदित्वा** விதி3த்வா (ஒருவன்) அறிந்து **परमात्मरूपं** பரமாத்மரூபம் (அதே) மேலான ஆத்ம ஸ்வரூபத்தை **प्रयाति** ப்ரயாதி அடைகிறான்.

இங்கு விளக்கியபடி, மனதில் வெளிப்படுகின்ற, பிளவுபடாத, இரண்டற்ற, அனைத்திற்கும் ஸாக்ஷியான, கார்ய காரணமற்ற, தூய்மையான, மேலான ஆத்மஸ்வரூபத்தை ஒருவன் அறிந்து அதே மேலான ஆத்மஸ்வரூபத்தை அடைகிறான்.

**२४. यः शतरुद्रियमधीते सोऽग्निपूतो भवति सुरापानात्पूतो भवति ब्रह्महत्यात्पूतो भवति कृत्याकृत्यात्पूतो भवति तस्मादविमुक्त माश्रितो भवति। अत्याश्रमी सर्वदा सकृद्वा जपेत्॥**

24. யஃ ச1தருத்3ரியமதீ4தே ஸோऽக்3னிபூதோ ப4வதி
ஸுராபானாத்பூதோ ப4வதி
ப்3ரஹ்மஹத்யாத்பூதோ ப4வதி
க்ருத்யாக்ருத்யாத்பூதோ ப4வதி
தஸ்மாத3விமுக்தமாச்1ரிதோ ப4வதி ।
அத்யாச்1ரமீ ஸர்வதா3 ஸக்ருத்3வா ஜபேத் ॥

**यः** யஃ யார் **शतरुद्रियं** ச1தருத்3ரியம் ஸ்ரீ ருத்ரத்தை **अधीते** அதீ4தே ஓதுகிறானோ **सः** ஸஃ அவன் **अग्निपूतः भवति** அக்3னிபூதஃ ப4வதி அக்னியால் தூய்மையாக்கப்படுகிறான். **सुरापानात्** ஸுராபானாத் மது அருந்தியதால் வந்த (பாபத்தி ருந்து) **पूतः भवति** பூதஃ ப4வதி தூய்மை யாக்கப்படுகிறான். **ब्रह्महत्यात्** ப்3ரஹ்மஹத்யாத் ப்ராஹ்மணனைக்

கொன்ற (பாபத்தி ருந்து) **पूतः भवति** பூத: ப$_4$வதி தூய்மை யாக்கப்படுகிறான். **कृत्य-अकृत्यात्** க்ருத்ய-அக்ருத்யாத் செய்ய வேண்டியதைச் செய்யாத செய்யக்கூடாததைச் செய்த (பாபத்தி ருந்து) **पूतः भवति** பூத: ப$_4$வதி தூய்மையாக்கப்படுகிறான். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **अविमुक्तं** அவிமுக்தம் (அவன்) சிவனை **आश्रितः भवति** ஆச்$_1$ரித: ப$_4$வதி சார்ந்தவனாகிறான். **अत्याश्रमी** அத்யாச்$_1$ரமீ ஸந்யாஸி **सर्वदा** ஸர்வதா$_3$ எப்பொழுதும் **जपेत्** ஜபேத் (ஸ்ரீ ருத்ரத்தை) ஜபிக்கவேண்டும். **सकृत् वा** ஸக்ருத் வா (ஒரு நாளில்) ஒரு முறையாவது (ஜபிக்க வேண்டும்).

யார் ஸ்ரீ ருத்ரத்தை ஓதுகிறானோ, அவன் அக்னியால் தூய்மையாக்கப்படுகிறான். மது அருந்தியதால் வந்த பாபத்தி ருந்து தூய்மையாக்கப்படுகிறான். ப்ராஹ்மணனைக் கொன்ற பாபத்தி ருந்து தூய்மையாக்கப்படுகிறான். செய்ய வேண்டியதைச் செய்யாத, செய்யக்கூடாததைச் செய்த பாபத்தி ருந்து தூய்மையாக்கப்படுகிறான். ஆகவே அவன் சிவனைச் சார்ந்தவனாகிறான். ஸந்யாஸி எப்பொழுதும் ஸ்ரீ ருத்ரத்தை ஜபிக்க வேண்டும். ஒரு நாளில் ஒரு முறையாவது ஜபிக்க வேண்டும்.

**२५. अनेन ज्ञानमाप्नोति संसारार्णवनाशनम् ।**
**तस्मादेवं विदित्वैनं कैवल्यं फलमश्नुते**
**कैवल्यं फलमश्नुत इति ।।**

25. அனேன ஞானமாப்னோதி ஸம்ஸாரார்ணவநாச$_1$னம் ।
தஸ்மாதே$_3$வம் விதி$_3$த்வைனம் கைவல்யம் ப$_2$லமச்$_1$னுதே
கைவல்யம் ப$_2$லமச்$_1$னுத இதி ।।

**अनेन** அனேன இதன்மூலம் (தூய்மையானதால்) **संसार-अर्णव-नाशनं** ஸம்ஸார-அர்ணவ-நாச$_1$னம் (ஒருவன்) துயரக்கடலை நாசம் செய்யும் **ज्ञानं** ஞானம் ஞானத்தை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **एवं** ஏவம் இவ்விதம் **एनं** ஏனம் இதை (இந்த

ஆத்மாவை) **विदित्वा** விதி$_3$த்வா அறிந்து **कैवल्यं** கைவல்யம் மோக்ஷம் என்கின்ற **फलं** ப$_2$லம் பலனை **अश्नुते** அச்$_1$னுதே அடைகிறான். **कैवल्यं** கைவல்யம் மோக்ஷம் என்கின்ற **फलं** ப$_2$லம் பலனை **अश्नुते इति** அச்$_1$னுதே இதி நிச்சயமாக அடைகிறான்.

இதன் மூலம் தூய்மையானதால் ஒருவன் துயரக்கடலை நாசம் செய்யும் ஞானத்தை அடைகிறான். ஆகவே, இவ்விதம் இந்த ஆத்மாவை அறிந்து மோக்ஷம் என்கின்ற பலனை அடைகிறான். மோக்ஷம் என்கின்ற பலனை நிச்சயமாக அடைகிறான்.

**।। कैवल्योपनिषत् समाप्ता ।।**

கைவல்யோபநிஷத் முடிவுற்றது.

*******